I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1 (L.W.1)
SC.NO.203/2025

| | | |
|---|---|---|
| Name | : | Prabhakaran |
| Father Name | : | Munusamy |
| Address | : | No.12/29, Uthiramadha Koil Street Backside, Old town Vellore |
| Taluk | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.04.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 மற்றும் 2 வது எதிரிகள் ஆஜரில்லை. 3 மற்றும் 4 வது எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.35 P.M**

**முதல் விசாரணை–**

நாங்கள் மொத்தம் 5 பேர் நின்று பேசி கொண்டிருந்தோம். சுமார் 8 அல்லது 10 வருடத்திற்கு முன்னால் மாலை 6 மணிக்கு எங்க வீட்டு தெருவில் ஒரு இறப்பு ஏற்பட்டிருந்தது, அங்கு நின்று கொண்டிருந்தபோது 30, 40 பேர் கும்பலாக வந்தார்கள். அப்படி அவர்கள் வரும்போது நான் கீழே தவறி விழுந்து விட்டேன். அதனால் எனக்கு உதடு அருகில் காயம் ஆனது. எனவே அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அப்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.போலீசார் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து **அ.சா.ஆ. 1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். அவர்கள் கேட்டார்கள். கீழே தள்ளி நானே தான் விழுந்துவிட்டேன் என்று கூறினேன். சுரேஷ், பிரபாகரன் த/பெ. கருணாகரன், பிரகாஷ், உச்சி (எ) குமார் ஆகியோர்கள் நின்று பேசி கொண்டிருந்தோம்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் கடந்த 27.09.2015 அன்று சமார் 10.30 மணியளவில் நான், என் தம்பி சுரேஷ், மற்றும் ஓல்ட் டவுன் சேர்ந்த செல்லைய்யா, நண்பர்களுடன் ஓல்ட் டவுன் ராஜா கறி கடையிடம் நின்று கொண்டிருந்தபோது ஆனந்தன், டேவிட், சரவணன், சதீஷ, சேகர் மற்றும் சிலரும் கையில் கத்தி, இரும்பு ராடு, உருட்டு கட்டை, கருகற்களுடன் வந்து விநாயகர் ஊர்வலத்தின் போது அங்கிருந்த பெண்களை கேலி செய்ததாகவும் அதை கேட்டதற்கு தன்னை அசிங்கமாக திட்டியதாகவும், இரும்பு ராடால் சதீஷ் என்பவர் தன்னை அடித்ததாகவும் அதனால் என் முன் பக்க மேல் பல்லில் காயம் ஏற்பட்டு விழுந்தும், என் இடது முன் கையில் வீக்கம் ஏற்பட்டும், அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் சரவணன் உச்சி (எ) குமாரை இரும்பு ராடால் வலது பக்க தலையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், டேவிட் என்பவர் உச்சி (எ) குமாரை உருட்டு கட்டையால் தாக்கி இடது பக்க காதில் ரத்த காயமும் சிராய்ப்பு காயமும் ஏற்படுத்தினார் என்றும், தள்ளிவிடும்போது வலது பக்க கட்டை விரலில் சிராய்ப்பு காயம் ஏற்படுத்தினார் என்றும் கூறியுள்ளேன் என்றாலும் மேலும் வீட்டின் அருகே பெயர் தெரியாத சிலர் சென்று நின்றிருந்த Yamaha TN 73 3145 என்ற வண்டியை கல்லால் அடித்து முன்புற headlight யை சேதப்படுத்தியதாகவும், வீட்டின் cement sheet மேல் கல் போட்டு ரூ.25,000 மதிப்புள்ள சேதம் ஏற்படுத்தினார் என்றும் அங்குள்ளவர்கள் வந்தபின் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

மருத்துவமனையில் போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் வெள்ளை பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். போலீசார்

விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொல்லியவற்றை தான் கூறினேன்.

மீண்டும் சாட்சியை விசாரிக்க எதிரி தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**மறு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள், ஆனந்தன், டேவிட் ஆகியோர்களை தெரியாது.

**விசாரணை முடிந்த நேரம்: 12.50 P.M**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.04.08 18:50:02 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்